# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018
## கத்தோலிக்கத் திருமறை / කතෝලික ධර්මය - I

தரம் : **11** நேரம்: 1 மணி

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக. மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க**

1. திருவிவிலியத்தில் வரலாற்று நூல்களின் முக்கிய நோக்கமாவது
   1) இறைவனின் அன்பை விருத்திசெயவது
   2) இஸ்ராயேல் மக்கள் மீட்பின்பால் இட்டுச்செல்வது
   3) இஸ்ராயேல் மக்களின் எண்ணிக்கையை கணக்கிடுவது
   4) உலக வரலாற்றை எடுத்தியம்புது

2. தூய ஆவியால் நிரப்பப்பட்ட திருத்தூதர்கள் நற்செய்தி போதிக்கச்சென்ற இடங்களாவன
   1) பம்பிலியா - எருசலேயம் 2) பிகிரியா - யூதேயா
   3) எருசலேயம்- யூதேயா 4) லிஸ்திரா - கப்பர்னாகூம்

3. தொமீசியன் எனும் உரோமைப் பேரரசனின் காலத்தில் கிறிஸ்தவர் எதிர்கொண்ட கொடிய வேதனைகளில் , அவர்களைத் திடப்படுத்த எழுதப்பட்ட நூலானது
   1) திருவெளிப்பாடு 2) தூய மாற்கு நற்செய்தி
   3) தானியேல் 4) திருத்தூதர் பணி

4. “நான் செய்வதறியாத சிறுபிள்ளை நீர் தெரிந்து கொண்ட திரளாள மக்களிடையே அடியேன் இருக்கிறேன்” இவ்வாறு கூறியவர்
   1) மோசே 2) சலமோன் அரசன் 3) தூய பவுல் 4) தூய ஸ்தேவான்

5. பின்வரும் கூற்றுக்களில் ஞான இலக்கியப் பண்புகளை வெளிப்படுத்தும் விடையைத் தெரிவு செய்க
   A- நீதி, நேர்மையாக மக்களை ஊக்குவித்து, இறைவாழ்வு வாழ வழிப்படுத்தல்
   B- யூதர்களின் விபரங்களை தெளிவூட்டல்
   C- அன்றாட வாழ்க்கைக்கான அறிவுரைகள் காணப்படல்
   D- அரச நிர்வாகம் மக்களுக்கு பகிரப்படுவது பற்றியதாகும்
   1) A,B 2) A, D 3) B, D 4) A, C

6. தூய பேதுருவிற்கு கிடைக்கப்பெற்ற அதிகாரங்களாவன
   1) பாவம் மன்னித்தல் - இறையன்பை கற்பித்தல்
   2) திருச்சபையை வழிப்படுத்தல் - தலைமைத்தவம்
   3) தலைமைத்துவம் - விசுவாசத்தை வளர்த்தல்
   4) பாவம் மன்னித்தல், நற்செய்தி விழுமியம் போதித்தல், தலைமைத்துவம்

7. “இன்னிலையில் நீங்கள் ஒன்றாகக் கூடி வந்து உண்பது ஆண்டவரின் திருவிருந்து அல்ல” இவ்வாறு குறிப்பிடும் திருநூலானது
   1) கொரிந்தியர் 2) திருத்தூதர் பணி 3) எபிரேயர் 4) கொலேசியர்

8. நற்கருணை விருந்தில் பங்கு பற்றுவோர் எது முதலில் செய்ய வேண்டும் என தூய பவுல் குறிப்பிடுகின்றார்
   1) ஆன்மீக ஆயத்தம் 2) உடல் ஆயத்தம்
   3) அன்பின் கட்டளையில் வாழுதல் 4) சேவையை புறக்கணித்தல்

9. "மரியாயின் மாசற்ற இருதய சேணை" சபையின் முக்கிய நோக்கமாவது
   1) இறை உறவை விருத்தி செய்வது
   2) செபம், தவச் செயல் மூலம் உலகின் பாவ நிலையை தோற்கடிப்பது
   3) சாத்தானின் செயற்பாடுகளுக்கு ஆன்மாவை உட்படுத்தல்
   4) மரியன்னைக்கு ஆறுதல் அளித்தல்

10. நம்பிக்கை, எதிர்நோக்கு, இறையன்பு என்பன நிறைவேற்றப்படுவது
   1) செபம் மூலம் 2) நற்செயல் மூலம் 3) மனஸ்தாபப்டல் மூலம் 4) பிறரன்பு மூலம்

11. தற்கொலை செய்வது அயலவருக்கு எதிரான பாவமாக அமையக்காரணம்
   1) அயலவருக்கு எமது உதவி கிடைக்கப் பெறாமையினால்
   2) உயிர் இறைவனுக்கு உரிய சொந்தம் என்பதனால்
   3) அயலாரது உறவை தான்தோன்றித்தனமாக முறிப்பதனால்
   4) ஐந்தாம் கட்டளையை மீறுவதனால் ஆகும்

12. "தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள்................ காண்பர்" இடைவெளிக்குப் பொருத்தமான சொல்
   1) விண்ணரசை 2) நிம்மதி 3) உயிர்ப்பை 4) கடவுளைக்

13. "ப்றோபேரஸ்" என்ற சொல்லின் பொருள் யாது?
   1) மீட்டு 2) அபிசேகம் 3) ஒருவருக்காகப் பேசுபவர் 4) அழைக்கப்பட்டவர்

14. ஞாயிறு திருப்பலியில் நாம் நினைவு கூறுவது?
   1) பாஸ்கா மறைபொருள் 2) கிறிஸ்துவின் பாடுகள்
   3) இயேசுவின் உயிர்ப்பு 4) கிறிஸ்துவின் மரணம்

15. தவக்காலம் நிறைவடையும் நாளாவது
   1) அல்லேலூயா சனி 2) பெரிய வியாழன் 3) குருத்து ஞாயிறு 4) பாஸ்கு ஞாயிறு

16. திருப்பலியின் ஆரம்ப சடங்கு நிகழ்வினில் உள்ளடங்கும் பிரிவினைக் கொண்ட விடைத் தொகுதியானது
   A- முன்னுரை B- மனத்துயர் வழிபாடு C- காணிக்கைமன்றாட்டு
   D- சபைமன்றாட்டு E - மறையுரை
   1) A,B,E 2) B,C,D 3) C,D,E 4) A,B,D

17. பிறரின் பதவிகள், உரிமைகளை தட்டிப்பறித்தல் மூலம் மீறப்படும் கட்டளைகளாவன
   1) 7,10 2) 5,10 3) 6,9 4) 4,5

18. ஆண்டவரில் நம்பிக்கை கொண்டு அவரின் வார்த்தையின் படி வாழ வேண்டும் என எமக்கு கூறும் திருவிவிலிய நூல்
   1) விடுதலைப்பயணம் 2) இணைச்சட்டம்
   3) திருத்தூதர் பணி 4) தூய லூக்கா

19. கிரேக்கம் பிரதியில் இணைத்திருமறை நூலில் நெகேமியா நூலுக்குப் பின் காணப்படும் இருநூல்களாவன
    1) தோபித்து - பாரூக்
    2) பாரூக் - சபை உரையானர்
    3) எசாயா -சீராக்
    3) தோபித்து - யூதித்து

20. "இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும் " என இறைவனின் குரலுக்கு செவிசாய்த்த இறைவாக்கினர் யார்?
    1) எரேமியாஸ்   2) ஆமோஸ்   3) எசேக்கியேல்   4) எசாயா

21. இயேசு இறை மகனாகிய மெசியா எனும் நம்பிக்கையை ஏற்படுத்த எழுதப்பட்ட நற்செய்தியானது
    1) தூய யோவான் நற்செய்தி
    2) தூய லூக்கா நற்செய்தி
    3) தூய மாற்கு நற்செய்தி
    4) தூய மத்தேயு நற்செய்தி

22. செபத்தின் மூலம் இறைவனைக்கண்டுகொள்ள எமக்கு அழைப்பு விடும் நற்செய்தியாளர்
    1) தூய லூக்கா   2) தூய மாற்கு   3) தூய மத்தேயு   4) தூய யோவான்

23. செபதேயு - சலோமை என்போரை பெற்றோராகக்கொண்ட திருத்தூதர் யார்?
    1) பேதுரு - அந்திரே
    2) பிலிப்பு - பார்த்தலேமேயு
    3) யோவான் - யாக்கோபு
    4) பேதுரு - யோவான்

24. "மனிதனின் விலா எலும்பிலிருந்து பெண் படைக்கப்பட்டாள்" இவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பது
    1) படைப்பு பற்றிய முதல் கதை
    2) படைப்பு பற்றிய இரண்டாம் கதை
    3) பிக்பான்ட் கொள்கை
    4) பரிணாம வாதக் கொள்கை

25. "நீ மண்ணில் பயிரிடும் போது அது இனிமேல் உனக்கு பலன் தராது " இக் கூற்றுடன் தொடர்புடைய நபர்
    1) ஆதாம்   2) ஆபேல்   3) காயீன்   4) பாம்பு

26. அவரின் பரம்பரையில் அவர் குற்றமற்றவர் அவர் இறைவனோடு நல்லுறவை வளர்த்திருந்தார் இவ்வாறு குறிப்பிடப்படுபவர்
    1) மோசே   2) ஆபிரகாம்   3) ஆரோன்   4) நோவா

27. "யோசோப்பை முன்பின் அறிந்திராத புதிய மன்னன் ஒருவன் எகிப்தில் தோன்றினான் இக் கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுவது யாது?
    1) புதிய மன்னன் யோசேப்பின் பெயரை அறிந்திருக்கவில்லை
    2) புதிய மன்னன் யோசோப்பை அறியத் தேவையில்லை
    3) புதிய மன்னன் யோசேப்பை பற்றியும், மாபெரும் சேவை பற்றியும் அறிந்திருக்க வில்லை
    4) புதிய மன்னன் யோசேப்பின் பரம்பரையில்லை என்பது

28. பார்வோன் மோசேயின் வேண்டுதலுக்கு செவிசாய்க்காமைக்கான காரணமாவது
    1) தானே பேரரசன் என எண்ணியமையாகும்
    2) இறைசெய்தியை ஏற்காது தனது அதிகாரத்தை பயன்படுத்தியமை
    3) அடிமைகள் தனக்கு தேவை என்பதால்
    4) இறைவனின் அதிகாரத்தை அறிந்திருக்காமையாகும்

29. "இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன் அவர் என்க்கு முன் வழியை ஆயத்தம் செய்வார்" இவ்வாறு குறிப்பிடும் திரு நூல்
    1) திருப்பாடல்   2) சபை உரையாளர்   3) திருவெளிப்பாடு   4) மலாக்கி

30. உங்களுள் ஒவ்வொரு ஆணும் விருத்தசேதனம் செய்து கொள்ள வேண்டும் இது இறைவன் யாருடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாகும்
    1) ஆதிப்பெற்றோர்   2) நோவா   3) ஆபிரகாம்   4) இஸ்ராயேல்

31. இயேசு பாலை நிலத்துக்கு சென்றதன் பிரதான் நோக்கமானது
   1) மறைபரப்பும் பணிக்கு தம்மை ஆயத்தம் செய்வதற்கு
   2) சாத்தானால் சோதனைக்கு உட்படுவதற்கு
   3) பொது வாழ்வில் ஈடுபடுவதற்கு
   4) விநோத அனுபவம் பெறுவதற்கு

32. “மகளே!“ துணிவோடிரு உனது நம்பிக்கை உன்னை குணமாக்கிற்று இவ்வாறு இயேசு கூறியது
   1) வெரோணிக்காள்   2) மார்த்தாள்
   3) இரத்தப்போக்குடைய பெண்   4) மக்லத மரியா

33. இறையாட்சியின் மதிப்பீடுகளை உள்ளடக்கிய உவமையடங்கிய விடையானது
   A- கடுகு விதை   B- நல்ல சமாரியன்
   C- புதையல்   D- அத்தி மரம்
   E- புளிப்பு மா
   1) ABC   2) ACE   3) CDE   4) ABD

34. துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அலர்கள் ......................... பெறுவர். இடைவெளிக்குப் பொருத்தமான சொல்
   1) விண்ணரசு   2) நிறைவு   3) நாட்டை   4) ஆறுதல்

35. திருமுழுக்கு வழங்கும் போது திருத்தைலம் பூசுவதன் மூலம் அடையாளப்படுத்தப்படுவது
   1) விசுவாசம் ஏற்படுத்தல்   2) இறையன்பை ஏற்படுத்துதல்
   3) திடப்படுத்துதல்   4) இறைபிள்ளை என்பதை வெளிப்படுத்துதல்

36. மரணத்தருவாயில் இருக்கும் கிறிஸ்தவனுக்கு உறுதிப் பூசுதல் வழங்க அதிகாரமுடையவர்
   1) ஆயர்   2) எல்லா கத்தோலிக்க குருவானவருக்கும்
   3) துறவற கன்னியர்   4) பங்குத் தந்தை

37. பின்வரும் செயற்பாடுகளில் உண்மையான மன மாற்றத்தின் செயற்பாடாக அமைவது
   1) என்ன துன்ப - துயரமாக இருப்பினும் பொறுப்பினை மகிழ்வாக நிறைவேற்றுதல்
   2) மேலதிகமாகவுள்ள சொத்துக்களை பிறருடன் பதிர்ந்து கொள்ளல்
   3) திருப்பலியில் பங்கு கொண்டு நற்கருணை பெற்றுக்கொள்ளல்
   4) உறவுகளுடன் மட்டும் நட்புறவு பேணுவது

38. “நோயாளரின் தூய பூசுதல்“ எனும் அப்போஸ்தலிக்க படிப்பினையை வெளியிட்ட திருத்தந்தையானவர்
   1) தூய 13 ம் லியோ திருத்தந்தை அவர்கள்
   2) தூய 2 ம் அருள் - சின்னப்பர் அவர்கள்
   3) தூய 16 ம் பெனடிக் அவர்கள்
   4) தூய 6 ம் சின்னப்பர் அவர்கள்

39. கத்தோலிக்க திருமணமானது மண முறிவிற்கு உட்பட முடியாமைக்கு காரணம்
   1) சேவையின் அருளடையாளம் என்பதால்
   2) இறைவன் முன்னிலையில் செய்யப்படும் உடன் படிக்கை என்பதால்
   3) அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதனால்
   4) குரு முன்னிலையில் திருமணம் நிறைவேற்றப்படுவதனால்

40. வனத்துப் பிதாக்கள் என்று அழைக்கப்பட்டவர்களில் முதன்மையானவராகக் கொள்ளப்படுபவர்
   1) புனிதசெபஸ்தியார்   2) தேப்ஸ் சின்னப்பர்
   3) புனித ஆசிர்வாதப்பர்   4) புனித பக்கோமியா

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018
## கத்தோலிக்கத் திருமறை / කතෝලික ධර්මය - II

தரம் : **11** நேரம்: 2 மணித்தியாலம்

- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக**

1. 1. இஸ்ராயேலர் பபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்டபின் திரும்பவும் தம் சொந்த நாட்டுக்கு வந்து சமய, சமூக பணிகளில் ஈடுபட்டமையை கூறுகின்ற இரு நூல்களைத் தருக?
   2. தூய திருச்சபையானது கிறிஸ்துவுடனும்,தூய ஆவியுடனும் தொடர்புபட்டுள்ள விதத்தினை இரு காரணம் தந்து குறிப்பிடுக?
   3. புதிய உடன்படிக்கையில் “திருப்பலியை“குறிக்கும் வேறு இரு பெயர்களை எழுதுக?
   4. காணிக்கைப் பவனியின் உப பிரிவுகள் இரண்டும் எவை?
   5. யேசுவை கைது செய்யும் வேளையின் போது, திருத்தூதர்களால் மேற்கொள்ளப்பட்ட இரு செயற்பாடுகளை குறிப்பிடுக?
   6. தூய மத்தேயு நற்செய்தியும் - தூய லூக்கா நற்செய்தியும் எழுதப்பட்ட இடங்களை தனித்தனியே தெளிவாகக் குறிப்பிடுக.
   7. மனம் வருந்துவதற்கான வழிகள் இரண்டு தருக?
   8. கத்தோலிக்க திருமணத்திற்குள்ள சட்டரீதியான இரு தடைகளை எழுதுக?
   9. துறவற சபைகளின் இரு பிரிவுகளும் என்ன?
   10. மனிதன் மேலான படைப்பாகக் கொள்ளப்படக் காரணம் இரண்டு எழுதுக?

(2×10=20 புள்ளிகள்)

2. 1. இயேசுவை கைது செய்த யூதர்கள் அவரை விசாரணைக்கு அழைத்துச் சென்ற இரு இடங்களை எழுதுக?
   2. சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த வேளையில் யூதர்கள் இயேசுவிற்கு செய்தபரிகாச செயல்கள், கொடுமைகள் மூன்று தருக?
   3. விண்ணரசில் புதுவாழ்வைப் பெற்றுக் கொள்ளப் பாடசாலை மாணவரான நீர் செய்யக் கூடிய நற்செயல்கள் 5 தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

3. 1. இறையன்பிற்கு எதிரான பாவங்கள் இரண்டு தருக?
   2. திருப்பலி ஒப்புக்கொடுப்பதன் நோக்கம் 3 எழுதுக?
   3. எமக்கு அன்பு செய்யும் இறைவனுக்கு பிரதியன்பு காட்டக்கூடிய வழிமுறைகள் 5 எழுதுக?

(2+3+5=10 புள்ளிகள்)

4. 1. லாஒஸ் (Laos) எர்கோன் (Evgon) எனும் இரு சொற்களின் பொருள் என்ன?
   2. திருவழிபாட்டின் மூன்று பிரதான பகுதிகளும் எவை?
   3. உமது பங்கில் திருவழிபாட்டு வழிபாடுகளை கருத்துள்ளதாய் செயற்படுத்த உம்மால் செய்யக்கூடிய செயற்பாடுகள் 5 குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

5. 1. சமூக சேவையின் அருளடையாளம் இரண்டும் எவை?
   2. பணிக்குருத்துவத்தின் மூன்று நிலைகளும் எவையென குறிப்பிடுக?
   3. குருக்களின் கடமைகள் 5 எழுதுக?

(2+3+5=10 புள்ளிகள்)

6. 1. இறைவன் ஆபிரகாமோடு செய்து கொண்டு உடன் படிக்கையில் உள்ள பிரதான இரு விடயங்கள் என்ன?
   2. இஸ்ராயேலின் மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த பார்வோன் மன்னன் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்று தருக?
   3. உமது வாழ்வில் இறைவனை கண்டுணர்ந்த சந்தர்ப்பம் 5 குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

7. இரண்டு தலைப்பை தெரிந்து சிறு குறிப்பு எழுதுக
   1) உன்னத குருவின் வேண்டுதல்
   2) மானிட வளங்களைக் காப்போம்
   3) பாவம்
   4) ஐந்நூல்

(2x5=10 புள்ளிகள்)